بسم الله الرحمن الرحيم

## துன்பங்களை நீக்கும் துஆக்கள்

### 1. إِنَّا لِلَّهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ اللَّهُمَّ أْجُرْنِي فِي مُصِيبَتِي وَأَخْلِفْ لِي خَيْرًا مِنْهَا إِلَّا أَخْلَفَ اللَّهُ لَهُ خَيْرًا مِنْهَا

'இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்'

(நிச்சயமாக நாம் அல்லாஹ்வுக்கே உரியவர்கள்; அவனிடமே திரும்பிச் செல்பவர்கள்)

'அல்லா ஹும்மஃஜுர்னீ ஃபீமுஸீபத்தீ வஅக்ரிலிஃப்லீ கைரம் மின்ஹா'

இறைவா, எனக்கேற்பட்ட இத்துன்பத்திற்காக எனக்கு நற்கூலி வழங்குவாயாக. இதற்கு பதிலாக எனக்கு நன்மையை வழங்குவாயாக! (முஸ்லிம் 1674)

### 2. لا إله إلا أنت سبحانك ، إني كنت من الظالمين ،

லாயிலாஹ இல்லா அன்த சுப்ஹானக்க இன்னீ குன்து மினள்ளாலிமீன்

உன்னைத் தவிர வணக்கத்திற்குரியவன் யாருமில்லை. நீ தூயவன். நானே அநீதியிழைத்தவனாகி விட்டேன். (ஹாகிம்)

### 3. لَا إِلَهَ إِلَّا اللَّهُ الْعَظِيمُ الْحَلِيمُ لَا إِلَهَ إِلَّا اللَّهُ رَبُّ السَّمَوَاتِ وَالْأَرْضِ وَرَبُّ الْعَرْشِ الْعَظِيمِ

"லா இலாஹ இல்லல்லாஹுல் அழீமுல் ஹலீம். லா இலாஹ இல்லல்லாஹு ரப்புஸ் ஸமாவாத்தி வல்அர்ளி வரப்புல் அர்ஷில் அழீம்"

கண்ணியம் வாய்ந்தோனும் பொறுமை மிக்கோனுமாகிய அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் யாரும் இல்லை. வானங்கள் மற்றும் பூமியின் அதிபதியும் மாபெரும் அரியாசனத்தின் அதிபதியுமான அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் யாரும் இல்லை. (புகாரி 6345)

### 4. أَللَّهُ أَللَّهُ رَبِّي لَا أُشْرِكُ بِهِ شَيْئًا

அல்லாஹு அல்லாஹு ரப்பீ லா உஷ்ரிகு பிஹி ஷைஆ

அல்லாஹ்வே அல்லாஹ்வே என் இறைவன். அவனுக்கு இணையாக எதையும் நான் கருதமாட்டேன். (அபூதாவுத் 1304)

### 5. اللَّهُمَّ رَحْمَتَكَ أَرْجُو فَلَا تَكِلْنِي إِلَى نَفْسِي طَرْفَةَ عَيْنٍ وَأَصْلِحْ لِي شَأْنِي كُلَّهُ لَا إِلَهَ إِلَّا أَنْتَ

அல்லாஹும்ம ரஹ்மதக அர்ஜு ஃபலா தகில்னீ இலா நஃப்ஸீ தர்ஃபத அய்ன் வஅஸ்லிஹ் லீ ஷஃனீ குல்லஹு லாயிலாஹ இல்லா அன்த.

இறைவா உன் அருளை நான் எதிர்பார்க்கின்றேன். எனவே கண்ணிமைக்கும் நேரத்திலும் என்னை என்னிடமே சாட்டிவிடாதே. என் காரியம் முழுவதையும் சரிசெய்வாயாக. உன்னைத் தவிர வணக்கத்திற்குரியவன் யாருமில்லை. (அபூதாவுத் 4426)

6. اللَّهُمَّ إِنِّي عَبْدُكَ وَابْنُ عَبْدِكَ وَابْنُ أَمَتِكَ نَاصِيَتِي بِيَدِكَ مَاضٍ فِيَّ حُكْمُكَ عَدْلٌ فِيَّ قَضَاؤُكَ أَسْأَلُكَ بِكُلِّ اسْمٍ هُوَ لَكَ سَمَّيْتَ بِهِ نَفْسَكَ أَوْ عَلَّمْتَهُ أَحَدًا مِنْ خَلْقِكَ أَوْ أَنْزَلْتَهُ فِي كِتَابِكَ أَوْ اسْتَأْثَرْتَ بِهِ فِي عِلْمِ الْغَيْبِ عِنْدَكَ أَنْ تَجْعَلَ الْقُرْآنَ رَبِيعَ قَلْبِي وَنُورَ صَدْرِي وَجِلَاءَ حُزْنِي وَذَهَابَ هَمِّي

அல்லாஹும்ம இன்னீ அப்துக வப்னு அப்திக வப்னு அமதிக நாஸியதீ பியதிக மாளின் ஃபிய்ய ஹுக்முக அத்லுன் ஃபிய்ய களாஉக அஸ்அலுக பிகுல்லி இஸ்மின் ஹுவ லக சம்மைத்த பிஹி நஃப்ஸக அவ் அல்லம்தஹு அஹதம் மின் கல்கிக அவ் அன்ஸல்தஹு ஃபீ கிதாபிக அவிஸ்தஃஸர்த்த பிஹீ ஃபீ இல்மில்கைபி இன்தக்க அன் தஜ்அலல் குர்ஆன ரபீஅ கல்பீ வநூர சத்ரீ வஜிலாஅ ஹுஸ்னீ வதஹாப ஹம்மீ

இறைவா நான் உன் அடிமை.உன் அடிமையின் மகன். உன் அடிமைப் பெண்ணின் மகன். என் பிடி உன் கையில் உள்ளது. என் விசயத்தில் உன் தீர்ப்பு நடந்தேறக்கூடியது. என் விசயத்தில் உன் தீர்ப்பு நீதமானது. உனக்கு நீ சூட்டிக்கொண்ட பெயர்கள் அல்லது உன் படைப்பினங்களில் எவருக்காவது நீ கற்றுக்கொடுத்த பெயர்கள் அல்லது உன் வேதத்தில் நீ இறக்கிய பெயர்கள் அல்லது உன் மறைவான ஞானத்தில் உன்னிடம் மட்டுமே நீ வைத்துள்ள பெயர்கள் என உனக்குரிய அனைத்து பெயர்களையும் கொண்டு உன்னிடம் வேண்டுகிறேன். குர்ஆனை என் உள்ளத்திற்கு வசந்தமாகவும் என் நெஞ்சிற்கு ஒளியாகவும் என் கவலையை நீக்கக்கூடியதாககூம் என் துக்கத்தை போக்கக்கூடியதாகவும் ஆக்குவாயாக. (அஹ்மது 3528)

7. 'اللهم لا سهل إلا ما جعلته سهلا ، وأنت تجعل الحزن سهلا إذا شئت'

அல்லாஹும்ம லா சஹ்ல இல்லாமா ஜஅல்தஹு சஹ்லா. வஅன்த்த தஜ்அலுல் ஹஸ்ன சஹ்லன் இதா ஷிஃத

இறைவா நீ இலகுவாக்கினால் தவிர இலகு இல்லை. நீ விரும்பினால் கவலையை இலகுவானதாக ஆக்கிவிடுகிறாய். (இப்னு ஹிப்பான்)

8. لَا حَوْلَ وَلَا قُوَّةَ إِلَّا بِاللَّهِ

"லா ஹவ்ல வலா குவ்வத்த இல்லா பில்லாஹ்"

அல்லாஹ்வின் உதவியில்லாமல் (பாவங்கப்லிருந்து) விலகிச் செல்லவோ (நல்லறங்கள்) புரிய ஆற்றல்பெறவோ மனிதனால் முடியாது (புகாரி 6384)